செ.வெ.எண்: 10 / ஜூலை /2020 நாள்: 03.07.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை ஊராட்சி ஒன்றியம், பண்ணப்பட்டி ஊராட்சி, மேற்க்கு களம் பகுதி, சின்னக்கடை வீதி ஆகிய பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கையாக தடைசெய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட இடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் இன்று (3.7.2020) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

-------------

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை ஊராட்சி ஒன்றியம், பண்ணப்பட்டி ஊராட்சி, மேற்க்கு களம் மற்றும் சின்னக்கடை வீதி ஆகிய பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கையாக தடைசெய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட இடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் இன்று (3.7.2020) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கிராமப் பகுதிகளில் உள்ள தனிமைப்படுத்தப்பட்ட நபர்களின் வீடுகளில் சுகாதார துறையின் மூலம் அறிவிப்பு நோட்டீஸ் ஒட்டப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். மணப்பாறை ஊராட்சி ஒன்றியம், பண்ணப்பட்டி ஊராட்சி, மேற்க்கு களம் மற்றும் சின்னக்கடைவீதி ஆகிய பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களின் வீடுகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் பொது இடங்களில் நடமாடக் கூடாது. முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். கைகளை சோப்பு போட்டு கழுவ வேண்டும். வீடுகளில் உள்ள சுற்றுப்புறங்களை தூய்மையாக பராமரிக்க வேண்டும் என அறிவுரை வழங்கினார். மேலும், தனிமைப்படுத்தப்பட்ட நபர்கள் 14 நாட்கள் தனிமையில் இருக்க வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது மணப்பாறை வட்டாட்சியர் திருமதி.தமிழ்கனி மற்றும் மணப்பாறை ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**